சம்ஸ்கிருத இலக்கணம்

ஓர் அறிமுகம்

ச.பத்மநாபன்

ॐ

சம்ஸ்கிருத இலக்கணம் - ஓர் அறிமுகம்

ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்
தலைவர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாட விதானத்திற்கு அமைவானது

வெளியீடு:
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
முன்னேஸ்வரம்,
சிலாபம்.
2017

நூல் விபரம்

நூலின் பெயர்	:	சம்ஸ்கிருத இலக்கணம் – ஓர் அறிமுகம்
ஆசிரியர்	:	பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் B.A.(Hons), P.G.Dip.in.Edu,M.Phil-Sanskrit தலைவர், சம்ஸ்கிருதத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
பதிப்பு	:	முதற்பதிப்பு, 08.03.2017
வெளியீடு	:	முன்னேஸ்வரம் தேவஸ்தானம் முன்னேஸ்வரம், சிலாபம்.
அச்சமைப்பு	:	மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ் நல்லூர், யாழ்ப்பாணம்
பக்கங்கள்	:	
பிரதிகள்	:	500
ISBN	:	978-955-43962-6-5

முகவுரை

I

சம்ஸ்கிருத மொழியின் பிரதான கூறாகவும் மூலவேராகவும் விளங்கும் இலக்கணத்தைப் பற்றிய அறிமுகத்தினை வழங்கும் இந்நூல் சம்ஸ்கிருத இலக்கணம் - ஓர் அறிமுகம், எனும் பெயருடன் வெளிவருகின்றது. சம்ஸ்கிருத மொழியைக் கற்கவிளையும் மாணவர்களுக்கு இலக்கணம் பற்றிய விரிவானதோர் அறிமுகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் நோக்குடன் கலைத்திட்ட அமைவிற்கு ஏற்ப ஓர் பாடவிதானத் திற்கு உள்ளடங்கலாக உருவாக்கவேண்டும் எனும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டதே இந்நூல் ஆகும். சம்ஸ்கிருத மொழியைத் தமிழ்மொழி மூலம் கற்கவிளையும் மாணவர்களுக்கு ஆசிரியரின் உதவியின்றி கற்க முடியாது. எனினும், முழுமையாக அவ்வாறன்றி ஐயம்தெளியும் வகையில் ஆசிரியரது வழிகாட்டலையும், பாடநோக்கித்திற்கு ஏற்புடைய முன்னறிவு முறைமைகளையும் உள்ளடக்கியதாக முதலாம்வருடம் கலைத்தேர்வில் உள்வாரி / வெளிவாரி மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டதே இப் பாடநூற் கையேடாகும்.

சம்ஸ்கிருத மொழியின் இலக்கணம் சார்ந்த பல்வேறுபட்ட நுட்பங்களையும், இந்நூல் தெளிவுபடுத்த முயற்படுகிறது. இந்நூலின் பயன்பாட்டின் பெறுபேறு தொடர்ச்சியாக இதன் விரிவுகளை நோக்கியவண்ணம் செல்வதாக அமைவது தூரநோக்குடையதாக அமைந்து காணப்படும் எண்ணமாகும்.

II

செம்மொழி இலக்கியம் எனும் உயர் அந்தஸ்தைப்பெற்ற மொழிகளான இலத்தீன், கிரேக்கம், சம்ஸ்கிருதம் என்பனவும், ஜெர்மனியம், பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் எனும் மொழிகளுள் பழைமையானதும் தொடர்ச்சியானது மான மொழிமரபைக் கொண்டமொழி எனும் பெருமையுடையமொழி சம்ஸ்கிருத மொழியாகும்.

இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலும், இந்தோ ஜெர்மனிய மொழிக்குடும்பத்திலும் சம்ஸ்கிருத மொழியின் தொடர்புடையதன்மையினை மொழியியலாளர்கள் பலர் ஆய்வுசெய்துள்ளனர். இதனூடான ஒப்பியல் மொழியியலாய்வுகள் சம்ஸ்கிருத மொழியின் உயர்வினைத் தனக்கேயுரிய மரபில் பேணிநிற்கின்றமையை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டத்தவறியதில்லை.

இந்திய மொழிமரபில் வட இந்திய மரபினையும் தென்னிந்திய மரபினையும் தென்னிந்தியமரபினையும் ஒன்றுபடுத்திய நெறிமுறையில் மொழிவழக்கின் அதிக செல்வாக்கைப் பெற்றதன்மையில் வட இந்தியாவில் இந்தி, மராட்டி, குஜராத்தி, அஸ்ஸாமி, ஒரிஸா, காஷ்மீரி, பஞ்சாபி, வங்காளி ஆகிய மொழிகள் யாவற்றுடனும் தொடர் புடைய ஒரே மொழியான சம்ஸ்கிருதமொழி வடமொழி என அழைக்கப்படுகின்றது. தென்னிந்தியாவில் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு எனும் மொழிகள் யாவற்றுடனும் தொடர்புடைய ஒரேமொழியாகிய தமிழ்மொழி தென்மொழி என அழைக்கப்படுகின்றது. இதனடிப்படையில் வடமொழியென்பது சிறப்பாக சம்ஸ்கிருதமொழியினை யும், தென்மொழியென்று சிறப்பாக தமிழ்மொழியினையும் சுட்டுவனவாகின்றன.

III

சம்ஸ்கிருதமொழியின் புராதனவடிவமே வேத இலக்கியங்களாகின்றன. அதனடிப்படையில் சம்ஸ்கிருத மொழியின் புராதன மொழிவடிவம் வைதிகமொழியென்றும்; பாணினியெனும் சம்ஸ்கிருத இலக்கண ஆசிரியரின் அஷ்டாத்யாயீ, அல்லது பாணினீயம் எனும் இலக்கண நூலால் பிராகிருதம் எனும் பேச்சுவழிமொழி மரபிலிருந்து செம்மைப்படுத்தப்பட்ட மொழிவடிவமே சம்ஸ்கிருத மொழியாகும். இத்தகைய சிறப்பின் மேன்மையினால் பாணினி சம்ஸ்கிருத மொழியின் தந்தையெனும் சிறப்புப்பெறுகின்றார். வைதிகமொழியென்பது வேத இலக்கியங்களுக்குரிய சிறப்புவாய்ந்த அமைப்பான ஸ்வரங்களை அமைத்து உச்சரிக்கும் முறையாகும். உத்தாததம், அநுதாத்தம், ஸ்வரிதம் எனும் வகையில் ஸ்ருதி எனும் மரபில் ஒவ்வொரு வேதங்களுக்குமுரிய தனித்துவத்தை அவைகளை அத்யயனம் செய்யும் முறைகளுடன் இணைந்ததாக பேணிப்பாதுகாத்துவருகின்றது. ஒவ்வொரு வேதங்களும் தமக்கேயான

வேதமொழிமரபை பிராதிசாக்யம் எனும் இலக்கண நூல் மரபினூடாக பாதுகாத்துவருகின்றன. வேதங்களை அத்யயனம் செய்பவர் பதம், கிரமம், ஜடை கனம் என்ற முறைமை களில் இடைச் செருக்கிகளும், மாறுதல்களும் மாற்றங்களும் ஏற்படாதவண்ணம் பாதுகாத்துவருவது தனித்துவமான வைதிகக் கல்வி மரபாகக் காணப்படு கின்றது. வேதங்கள்போற்றும் ஸ்வரங்கள் அமைந்த மொழி மரபிலிருந்து வளர்ச்சிபெற்று ஸ்வரங்களற்ற தன்மையினையடைந்தமையை உபநிடதங்களில் காணலாம்.

IV

சம்ஸ்கிருதமொழியின் தோற்றுவாய் உலகின்படைப்புடன் தொடர்புடையதாகவும், சிவனது நடராஜவடி வத்தில் படைத்தவைக்குறிக்கும் உடுக்கின் ஒலியலிருந்து தோன்றியதாகவும், பதினான்கு தடைவைகள் ஒலிக்கப்பட்ட உடுக்கின் ஒலியிலிருந்து வெளிப்பட்டவையே மாஹேஸ்வர சூத்திரங்கள் என்றும் அறியப்படுகின்றது. இச்சூத்திரங்கள் பதினான்கு ஆகும். இச் சூத்திரங்களின் உள்ளடக்கமாகவே சம்ஸ்கிருதமொழியின் இன்றியமை யாத எழுத்துக்கள் யாவற்றையும் காணமுடிகின்றது. இச் சம்ஸ்கிருதமொழி சிவனுடன் தொடர்புடையதான தோற்று வாயுடன் அமைந்து காணப்படுவதால் இம்மொழி தெய்வீகமொழி என்றும் சிறப்புப்பெறுகின்றது.

V

சம்ஸ்கிருதமொழியின் மிகப்பழைய இலக்கணநூல் பாணினீயம் ஆகும். இது அஷ்டாத்யாயீ என்றும் அழைக்கப்படும். ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பகுதிகளையுடையதாக எட்டு அத்தியாயங்கள் உண்டு. சுமார் நான்காயிரம் சூத்திரங்களை உள்ளடக்கிய இந்நூல் கி.மு.4ம் நூற்றாண்டைச் சார்ந்தது. வட இந்தியாவின் (இன்றைய பாக்கிஸ்தானின்) லாகூரில் சாலதூரஎனும் இடத்தில் தாக்ஷீ என்பவனின் மகனாகப் பிறந்தவரே பாணினி ஆவார்.

பாணினியின் இவர்களை உருவாக்கத்திற்கு அக்கால சமுதாயத்தின் மொழிநிலைச்சூழல் முக்கியகாரணி யாக விளங்குகின்றது. பொதுவாக இலக்கணம் என்பது "ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசவும், கற்கவும் பயன்படுவதே ஆகும்" எனக்கூறுவர். இந்நிலையில் பிராகிருதம் எனும் பேச்சுமொழி வழக்கிலிருந்து செம்மைப் படுத்தப்பட்ட மொழிவடிவமாகவே பாணினி விளங்குவதனைக் காணமுடிகின்றது. இந்நிலையில் சம்ஸ்கிருதம் என்பது சுத்தமான தூய்மையரன மொழி என்றும் பிராந்திய வழக்குகளற்றதும், அறிஞர்களது மொழி என்னும் அதனது உயர்வுநிலைத்தன்மை கருதப்படுகின்றது.

சம்ஸ்கிருத மொழியின் இலக்கணம் எனும் தன்மையில் பாணினி எனும் இலக்கணநூல் விஞ்ஞான பூர்வமான விதிகளையுள்ளடக்கிய தன்மையில் மூன்று முனிவர்கள் முக்கியத்துவமுடையவர்களாகவர். அவர்கள் பாணினி, காத்யாயனர், பதஞ்சலி ஆகியோரே அம்மும்முனிகள் ஆவர். இவர்களுள் பாணினி சூத்திரகாரர் என்னும் உரையாசிரியர் வரருசி என்றும் பதஞ்சலி மஹாபாஷ்யம் எழுதியவர் என்றும் சிறப்புப்பெறுகின்றனர்.

VI

இந்நியமரபினுள் கி.பி.1505களில் போத்துக்கேயரது வருகையுடன் இந்தியப்பண்பாட்டின் தனித்துவம் மிக்க அடையாளங்களை மேற்கு நாட்டவர்கள் வியப்புடன் நோக்கினர். அவ்வகையில் வேத இலக்கியம் முதல் மரபுசார் இலக்கியங்கள் அனைத்துமே உயர்வுநிலையில் நோக்கப்பட்டன. ஆய்வுமுறையில் நோக்கப்பட்ட அச்சிந்தனைகளைத் தமது மரபுடன் ஒப்பு நோக்கிய தன்மைகள் ஒப்பியல் ஆய்வுகளாகவே வெளிவரத் தலைப் பட்டன. அந்நிலையில் சிறப்புத்தன்மையுடன் நோக்கப்பட்ட மொழிமரமே இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம் ஆகும். இம்மொழிக்குடும்பத்தில் ஒப்பியல் இலக்கணம் எனும் மரபும், சிறப்பாக சம்ஸ்கிருத மொழிக்கான இலக்கண நூல்கள் பலவும் தோன்றுவதற்குரிய புதிய அணுகுமுறைகைளத் தோற்றுவித்தன.

சம்ஸ்கிருத இலக்கணம் எனும் மரபு முதன்முதலில் கி.பி 1668ல் ஹென்ரிச் ரொத் (Heinrich Roth) எனும் ஜெர்மனியரால் எழுதப்பட்டது. இந்நூல் வெளியிடப்பட்டாத நூல் என்றும் கூறுவர். இதனையடுத்து இந்நூல் கி.பி 1790ல் இலத்தீன் மொழியில் வெளியிடப்பட்டது. இதனைத்தொடர்ந்து கோல் புறூக் (1805), கரே (1808), வில்கின்ஸ் (1808) பொப் பென்பே, ஆகியோரால் ஒப்பியல் இலக்கணம் எனும் முறைமையில் இலக்கணம் எழுதப் பட்டது. விட்டினி (1879) வெக்கர் நெகல் ஆகியோர் சம்ஸ்கிருத இலக்கணம் (Sanskrit Grammar) என்றே தனியாக

நூல்களை எழுதினர். மொனிய வில்லியம்ஸ், மக்ஸ் மூலர் (1870), மக்டொனல் (1901) V.S.ஆப்தே, M.R.காலே என்ற வறாக எழுந்த இலக்கண நூல்கள் பாணினியில் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் மாணவர்களுக்காக வும் சிறப்பாக வாசகர்களுக்காகவும் - ஒன்று தொகுக்கப்பட்ட தன்மையில் எழுந்த நூல்களாகின. அம்மரபில் நோக்கையில் தேவநாகரி எனும் சம்ஸ்கிருத எழுத்தின் வரிவடிவத்தை ஆங்கில மொழி ஒலிவடிவம் கொடுக்கப்பட்டதாக ஆங்கில மொழிமூலமான நூல்களாக அவை விளங்குவன என்பது சுட்டிக் காட்டத்தக்கது. சம்ஸ்கிருத இலக்கணத்தை அறிமுகப்படுத்தும் வகையில் சு.பு.பண்டர்கார் என்பவரது இரு தொகுதிகளிலடங்கிய பயிற்சி நூல்கள் புதிய பரிணாமத்தை இட்டுச்செல்வதாக அமைந்து காணப்படுகின்றது.

VII

யாழ்ப்பாணத்து சம்ஸ்கிருதமொழிப் புலமையாளர் வரிசையில் பல்வேறுவிதமான நோக்கங்களை முன்னிறுத்தி பலவிதமான நூல்களை ஆக்கியுள்ளனர். அவர்களின் வரிசையில் சம்ஸ்கிருத இலக்கண மரபிற்காக நூல்களை எழுதியவர்கள் வரிசையில் நீர்வேலி சிவசங்கரபண்டிதர், நீர்வேலி, சிவப்பிரகாச பண்டிதர், நியாயசிரோமணி கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள், வியாகரண சிரோமணி தி.சி.சீதராம சாஸ்திரிகள், பண்டிதர் ச.பஞ்சாக்ஷரசர்மா, பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள், பேராசிரியர் வி.சிவசாமி, கலாநிதி திருமதி.வி.சிவச்சந்திரன், திருவாளர் செல்வரத்தினம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவை பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு தேவைகளை முன்னிறுத்தி வெளிவந்த நூல்களாகும். இவற்றுள் சில சம்ஸ்கிருத மொழியின் வரிவடிவமாகிய தேவநாகரி எனும் எழுத்தினை முதன்மையாகக் கொண்டதாகவும், கிரந்தலிபி எனும் வரிவடிவத்தை முதன்மையாகக் கொண்டதாகவும் அமைந்து விளங்குவதனைக் காணமுடிகின்றது.

சம்ஸ்கிருத மொழியை தேவநாகரிலிபி வரிவத்தினுதவியுடன் சம்ஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கற்பவர்களின் மொழி வரலாறு பற்றிய அடிப்படை அம்சங்களுடன் எழுத்துக்களினை எழுதும்முறை, உயிர் மெய்யெழுத்து கூட்டெழுத்து எனும் முறைமைகள் தெளிவுற நோக்கப்படுகிறது. சம்ஸ்கிருத எழுத்துக்களை எவ்விதம் அழகுற எழுதுவது எனும் முறைமை பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் படிநிலை வளர்ச்சியில் சாதாரணமாக சம்ஸ்கிருத வாக்கியத்தை ஆக்குவதற்கும், மொழி பெயர்ப்பதற்குமான தனித்துவமான பயிற்சி இதற்கு அனுசரணையாக அமைய வேண்டியதும் அவசியம்.

சம்கிருத மொழியை விருப்புடன் தாமாகக் கற்க விளையும் மாணவர் கையேடு எனும் இம் முயற்சியின் அறிமுகமாக அமையும் இந்நூலை மாணவர்கள் கற்று பயிற்சிபெற்று பயனடைவார்களாக.

ச.பத்மநாபன்
தலைவர்,
சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பிரதமானவும், தர்மகர்த்தாவும்
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.
08.03.2016

பொருளடக்கம்

அமர்வு	விடயம்	பக்கம்
01.	சம்ஸ்கிருத இலக்கணத்தின் தோற்றுவாய்	
02.	சம்ஸ்கிருத இலக்கணத்தில் பாணினியும் பாணினீயமும்	
03.	சம்ஸ்கிருத எழுத்துக்கள் - இலக்கணப்பகுப்பாய்வு	
04.	சம்ஸ்கிருத வினைவடிவங்கள் - நிகழ்கால வினைவடிவங்கள்	
05.	சம்ஸ்கிருதமொழியின் பெயர்ச்சொற்கள்	
06.	சம்ஸ்கிருத இலக்கணப் பயன்பாட்டில் சந்திவிதிகள்	
	பின்னிணைப்பு -I	
	எழுதும் பயிற்சி	

அமர்வு - 01

சம்ஸ்கிருத இலக்கணத்தின் தோற்றுவாய்.

அறிமுகம்
புராதன சம்ஸ்கிருத இலக்கணம்
சம்ஸ்கிருத மொழி
பிராகிருதம்/ சம்கிருதம்
சம்கிருத இலக்கண முறைமைகள்
இலக்கணத்தின் முக்கிய கூறுகள்
சாராம்சம்
கலைச்சொற்கள்
உசாத்துணை நூல்கள்

அறிமுகம்

உலகில் தோன்றிய புராதன இலக்கிய மொழிகளுள் சம்ஸ்கிருதமும் ஒன்றாகும். புராதன இந்திய மொழிகளுள் ஒன்றாக தொன்மையான மொழி எனும் நிலையில் சம்ஸ்கிருதமொழி புகழ்பெறுகின்றது. சம்ஸ்கிருத மொழியின் மிகப்பழைமையான வடிவம் வேத இலக்கியமரபில் பாதகாக்கப்பட்டு வந்த மரபுடையது. இந்தோ - ஐரோப்பிய மொழிமரபில் நிலைபெற்ற சம்ஸ்கிருதமொழி காலத்திற்கு காலம் பல்வேறு இலக்கண மரபுகளைக் கொண்டு வந்துள்ளது. அந்நிலையில் வேதஇலக்கியங்களுக்கு வேறுவகையான இலக்கணமரபு பின்பற்றப்பட்டு வந்தது. அம்மரபு மொழியை பிரிக்கவும், பொருள்விளங்கவும், சரியான வகையில் உச்சரிக்கவுமேயன்றி வேத இலக்கியங்களை உருவாக்குவதற்கல்ல. அந்நிலையில் சம்ஸ்கிருத மொழி என பிராகிருதம் எனும் பேச்த வழக்கிலருந்து வேறுபடுத்தி இலக்கணம் அமைந்த பெருமை பாணினி எனும் ஆசிரியரையே சாரும். இதன் படி பாணினி ஆசிரியரால் செம்மைப்படுத்தப்பட்ட மொழி வடிவமே சம்ஸ்கிருத மொழிவடிவம் ஆகும். சம்ஸ்கிருதம் என்றால் ‘செம்மையை செம்மைப்படுத்தியவர் பாணினி ஆவார். இதன் காரணமாக பாணினி சம்ஸ்கிருதமொழியின் தந்தை என அழைக்கப்படுகின்றார் இவ்வகையில் சம்ஸ்கிருத மொழியின் இலக்கண இயல்புகள், தோற்றம், எழுதுக்களின் பிறப்பு, பெயர், வினை மரபு ஏனைய வடிவங்களில் வினை வடிவில் பரஸ்சுபதம், ஆத்மனேபதம் எனும் கூட்டலமர்வுகள் என மொழி மரபு விரிந்து செல்லும் தன்மையதாகிறது. அவ்வகையில் நடராஜரது உருக்கொலிலிருந்து தோன்றியது எனும் மரபும், இதன் முன்னைய பாரம்பொருள்களை ஒன்று தொகுத்து நோக்கும் தன்மையுடையதாகவும் விளங்கும்.

புராதன சம்ஸ்கிருத இலக்கணம்

புராதண சம்ஸ்கிருதம் எனப் பேசப்படுவது வேதஇலக்கியங்களையே ஆகும். வேத இலக்கியங்களைப்பாதுகாக்க தோன்றியவையே வேதாங்கங்கள் ஆகும். அவையாவன சிகைஷ, வியாகரணம், வியாகரணம், ஜோதிஷம், சந்தஸ், நிருக்தம், கல்பம் என்பனவாகும். அவ்வகையில் வேதங்களை அத்யயனம் செய்வதற்கு பதமாக பிரித்துணருவதற்கு ஏற்பவே வேத இலக்கணங்கள் துணைபுரிகின்றன. அதன் வழி வியாகரணம் எனும் வேதாங்கமும், அதேபோல் இதனுடன் இணைந்ததாக சந்தஸ் எனும் யாப்பியல் நூலும், நிருக்தம் எனும் சொற்பொருள் அகராதியும் துணைபுரிகின்றன. இதேவேளை வேதங்களுக்கு முக்கியத்துவமுடையன ஸ்வரங்கள் ஆகும். அவையே மிகுந்த நுட்பமான தன்மையுடையன. இதன் காரணமாகவே வேதங்களுக்கு ஸ்வரங்களின் முக்கியத்துவம் பேணப்படுகின்றது. ஒவ்வொரு வேதங்களுக்குமுரிய இலக்கணமாக அவை **பிராதிசாத்யம்** என அழைக்கப்படுகின்றன. இத்தகைய மரபிலிருந்தே 'வியாகரணம்' எனும் சொல்மரபு இலக்கணத்திற்குரியதாக அழைக்கப்படுவதனையும் அவதானிக்கமுடிகின்றது.

சம்ஸ்கிருத மொழி

சம்ஸ்கிருதமொழி வடமொழியென்றும் அழைக்கப்படுகின்றது. உலகிமொழிகள் பலவற்றுள் புராதனமானதும் இலக்கியவளம் கொண்ட செம்மொழித்தன்மையதுமாக சம்ஸ்கிருதமொழியும் விளங்குகின்றது. சம்ஸ்கிருத மொழியின் இலக்கண ஆசிரியர் **பாணினி** ஆவார். **பாணினி என்பவரால் சம்ஸ்கிருதமொழி செப்பனிடப்பட்டடுள்ளது.** பாணினி எனும் ஆசிரியரே ***'சம்ஸ்கிருதமொழியின் தந்தை'*** என அழைக்கப்படுகின்றார். வைதிக மொழிமரபைத்தொடர்ந்து இதிஹாசபுராணங்கள் சுட்டும் மொழி மரபுக்கு மேலாக சமூக வழக்கில் பின்பற்றப்பட்டுவந்த மொழிமரபே **'பிராகிருதம்'** எனும் மொழியாகும் இப்பிராகிருத மொழிமரபை சீர்ப்படுத்தி அமைந்ததன் விளைவாகவே சம்ஸ்கிருத மொழி தோற்றம் பெற்றது. இது பண்டுத்தப்பட்டமொழி, செம்மொழி எனும் கருத்துக்களை உணர்த்துகின்றது. சம்ஸ்கிருத மொழியின் எழுத்துக்கள் தெய்வீக ஒலிவடிவங்களாகவே போற்றப்படுகின்றன. அந்நிலையில் சம்ஸ்கிருத இலக்கணத்தின் மூல ஊற்று 'மாஹேஸ்வர சூத்திரங்கள்' ஆகும். நடராஜப் பெருமானின் உடுக்கின் ஒலியிலிருந்து தோன்றிய பதினான்கு சூத்திரங்கள் 'மாஹேஸ்வர சூத்திரங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இப்பதினான்கு சூத்திரங்களுக்குள்ளேயே சம்ஸ்கிருத மொழிக்குரிய எழுத்தக்கள் உள்ளடக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக வாசிப்பு:

கைலாசநாதக்குருக்கள்,கா., (2010), **வடமொழி இலக்கியவரலாறு,** காலச்சுவடு, நாகர்கோவில். பக். 27 – 36.

பிராகிருதம் / சம்ஸ்கிருதம்

வைதிக இலக்கிய மரபின் பின்னர் ஏற்பட்ட புதிய புதிய பண்புகளையுடைய புதிய புதிய வடிவமான மொழிகளின் உருவாக்கமே 'பிராகிருதம்' ஆகும். சமயச் சார்புடைய மொழியாக இதனூடாக புத்தர் பாலிமொழியையும் லிஜனர்மாகதீ மொழியையும் பின்பற்றினர் அவ்விதமே பேச்சுவழக்கின் பல்வேறு இடங்களுக்கான வேறுபாடுகளின் தன்மையால் அவை பல்வேறு இடங்களுக்கு ஏற்ப அவை அழைக்கப்பட்டாலும் அவையனைத்தையும் இணைக்கும் பொதுச்சொல்லாக பிரகிருதம் எனும் சொல்லைப்பயன்படுத்தின. பிராகிருதமொழி பாஷா, வியாஷா, அபப்ரம்சம், பைசாசம் என நான்கு பெரும் பிரிவுகளையுடையது இதனுட்கிடையாக 49 மொழிகள் வரை சுட்டப்படுகின்றன. 'பிராகிருதம்' என்ற சொல்லிருந்து உருவானது இது 'அடிப்படை' எனப் பொருள்படும் பிராகிருதம் எனும் மொழியின் மரபுகள் பிரிவுகள் மிகலிருந்து செல்லும் தன்மையதாகும்.

சம்ஸ்கிருதம் என்பது ப்ராகிருத மொழியை செப்பனிட்டதனால் உருவாக்கப்பட்ட மொழியாகும். இதனால் செப்பனிட்டவர். பாணினி ஆவார் பாணினி எனும் ஆசரியர் அஷ்டாத்யாயீ எனும் அல்லது பாணினியம் எனும் இலக்கநூலூடாக செப்பனிடப்பட்ட மொழியே சம்ஸ்கிருதமொழி ஆகும். இதன்காரணமாக பாணினி சம்ஸ்கிருத மொழியின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

மேலதிக வாசிப்பு:

அகத்தியலிங்கம், ச., (2000), **இந்தியமொழிகள்,** இந்தோஆரிய மொழிகள், தொகுதி I, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம். பக். 196 – 204 'ஆரிய மொழிக்காலம்'

சம்ஸ்கிருத இலக்கண முறைமைகள்

வைதிக இலக்கியமரபுகள் முதல் பல்வேறு பட்ட இலக்கணமுறைமைகள் தோன்றிவளம் பெற்றுள்ளன. அவ்வகையில் வேதங்களுக்கான இலக்கணமுறைகள் வேதங்களை பொருளுடையனவாக விளங்கிக் கொள்ளவேயன்றி அவற்றினை மீண்டும் உருவாக்குவதற்கல்ல. வேதமரபுகளைத் தொடர்ந்து நலிவடைந்த வேதங்களின் தனித்துவம் அவைபாதுகாக்கப்பட்ட தன்மையூடாக வேதங்களுக்கேயுரிய தனித்துவமான அடையாளமாயின. அந்நிலையில் வேதஇலக்கியம் முதல் பாணினி வரையான காலப்பகுதியில் வளர்ச்சியும் மாற்றமும் பெற்ற பிராகிருதமரபில் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு இயல்புகள் இணைந்தனவாக அமைந்தன. அந்நிலையில் பாணினி தம்முன்னோர்களைச் சுட்ட அதேமரபில் பாணினியாலும் பாணினியினுடைய விஞ்ஞான பூர்வமான சம்ஸ்கிருத இலக்கணக் கட்டமைப்பாலும் அதனது

முறைமைகள் ஒழுங்கமைக்கப்பட்டன. இதன் வழி பதஞ்சலி, வரருசி ஆகியோரது இலக்கண உரைமரபு இம்முறைமைகளை வளம் பெறச் செய்வதில் தனிப்பொருள்சொல்வாக்குகளை ஏற்படுத்தின. இம்மரபில் எழுத்துக்கள், வினை, பெயர் எனும் மரபுகள் தனித்துவமானதாக அமைய அதாவது வளர்ச்சியில் இலக்கணமுறைகள் யாவும் ஒன்றுதிரட்டப்பட்டதன்மையில் காணப்படுவது மருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

மேலதிக வாசிப்பு:

Madonell, A.A., (2008) **Sankrit Gramar for Students** D.K. Printworld(P) ttd, New Delhi.Introduction, PP.x xviii

இலக்கணத்தின் முக்கிய கூறுகள்

சம்ஸ்கிருத இலக்கணத்தின் முக்கிய கூறுகள் ஆரம்பநிலையின் அடிப்படையம்சமாக மூன்று பகுதியாக நோக்கப்படுகின்றன. அவையாவன,

1. எழுத்தும், எழுத்துக்களின் பாகுபடும்.
2. வினையடிகளும், அவற்றின் பாகுபடும்.
3. பெயரடிகளும் அவற்றின் பாகுபாடுகளும்.

என்பனவாகும். இதனடிப்படையில் நோக்குகையில் இவை மிகநுட்பமான வகையில் பரந்து விரிந்து செல்லும் தன்மையனவாகும். அவற்றினடிப்படையில் நோக்குகையில் எழுத்துக்கள் பற்றியதும் எழுத்துக்களினுடை பகுப்புக்கள் பற்றியும் அவ்வெழுத்துக்களினுடைய தோற்றம் ஒலிவடிவம் பற்றிப்பேசுவதாக அமைவதோடு எழுத்துக்களின் வரிவடிவம் பற்றியும் நோக்குவதோக அமையும் வினையடிகள் பொதுவாக தாதுக்கள் என அழைக்கப்படுகின்றன. அதன்மரபில் இந்த வினையடிகள் பரஸ்மைபதம், ஆத்மானேபதம் என்றபாகுபாட்டினையும் கொண்டதாக அமைந்து விளங்கும். இவ்வினையடிகள் இலக்கணப்பகுப்பில் பத்துக்கணங்களாக பகுக்கபடுகின்றன. அவை பத்தும் இரண்டுபிரிவாக அவற்றின் இயல்புகளைக் கொண்டு பகுக்கப்படுகின்றன. அவையாவன முதலாம் தொகுதியிவ் 1ம், 4ம், 6ம் மற்றும் 10 ம் கணவினையடிகளும். இரண்டாம் தொகுதியில் 2ம், 3ம், 5ம், 7ம், 8ம் மற்றும் 9ம் கணவினைவடிகளும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதற்கு மேலாக நிகழ்காலம், இறந்தகாலம், ஏவல், வியங்கோள் எனும் முறையில் (Present system) நோக்கப்படுவதாகவும் அமையும் பெயரடிகள் ஆண், பெண், அலி என்பதோடு சர்வாமசபதம் எனும் சிறப்பும் பெறுகின்றன. அவை ஈறுகளின் அடிப்படையில் உயிர், மெய்யீடுகளாக பாகுபடுத்தப்படுகின்றமை இதனது விரிந்ததன்மையை வெளிப்படுதல். இவ்வாறாக ஆரம்ப நிலையில் சம்ஸ்கிருத இலக்கணத்தின் முக்கிய அடைப்படைக் கூறுகள் அமைவதாக விளங்கும்.

குறிப்பு:

- ❖ எழுத்துக்கள் பற்றிய விரிவை அமர்வு 03 லும்,
- ❖ வினைவடிவங்களுள் நிகழ்கால விளைவடிவங்களை (Present system) அமர்வு 04 லும்,
- ❖ பெயரடிகளுக்கான வேறு வடிவங்களை அமர்வு 05 லும் விரிவு நோக்குவதாக அமையும்.

செயற்பாடு - 01

சம்ஸ்கிருத மொழியின் இலக்கண மரபு வரலாற்றை விபரிக்குக?

சாராம்சம்

சம்ஸ்கிருத இலக்கணமரபில் வேதங்கள் புராதன சம்ஸ்கிருதம் என்றும், பாணினியின் இலக்கண வரம்பிற்குப்பின் சம்ஸ்கிருத மரபும் கொள்ளப்படுகின்றன. வைதிக இலக்கியம் முதல் பாணினியின் தோற்றம் வரையனான காலப்பகுதியாகி மக்களின் இயல்புமொழியாகிய பிராகிருதம் பிராந்திய நிலையில் வளர்ச்சியும் வளமும் பெற்றது. இப்பிராகிருத மொழியை செம்மைப்படுத்தியவரே பாணினி ஆசிரியர் ஆவார். பாணினி சம்ஸ்கிருத மொழியின் தந்தையாகப்போற்றப்படுகின்றார். சம்ஸ்கிருத மொழியின் இலக்கணமரபில் தொன்றுதொட்டு வரும் இலக்கண வரன்முறைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அதேவேளைஇலக்கண முறைமைகளாக எழுத்து, வினை, பெயர் எனும் மூன்று மரபுகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் மிகப்பரந்த இலக்கணமரபுகள் ஆரம்பநிலையில் நோக்கப்படுவதாக இவ்வமர்வு விளங்குகின்றது.

உசாத்துணை

1. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,P.S (1950), **வடமொழிநூல்வரலாறு,** அண்ணாமலை.
2. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,P.S (1948), **வடமொழிநூல்வரலாறு,** அண்ணாமலை.
3. அகத்தியலிங்கம், ச., (2000), **இந்தியமொழிகள்,** இந்தோஆரிய மொழிகள், தொகுதி I, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
4. Madonell, AA., (2008) **Sankrit Gramar for Students** D.K. Printworld(P) ttd, New Delhi. Introduction

அமர்வு 2

சம்ஸ்கிருத இலக்கண கர்த்தா பாணினியும் பாணினீயமும்.

அறிமுகம்

பாணினி

பாணினீயம்

ஆரம்ப இலக்கணமுறை

மாஹேஸ்வர சூத்திரம்

சாராம்சம்

அறிமுகம்

சம்ஸ்கிருத மொழிமரபின் இலக்கண ஆசிரியர் பாணினி ஆவார். இவரே சம்ஸ்கிருத மொழியின் தந்தையென போற்றப்படுகின்றார். அதன் வழி கி.பி 4ம் நூற்றாண்டைச் சார்ந்த இவர் சூத்திரவடிவில் சுமார் 4000 சூத்திரங்களைக் கொண்டு எட்டு அத்தியாயங்களைக் கொண்டது. எட்டு அத்தியாயங்களைக் கொண்டமைந்ததன் காணரமாக அஷ்டாத்யாயீ என்றும் அழைக்கப்படுகின்றது. மிகவும் சுமார் 2500 ஆண்டுகள் பழமைவாய்ந்த இவ்விலக்கண நூலானது மிகுந்த நுட்பமானதும், விஞ்ஞானபூர்வமான முறைமையுடன் படைக்கப்பட்டிருப்பதும் இவ்விலக்கண நூலாசிரியர் பற்றிய வியப்பினை பல்வேறு அறிஞர்களும் வெளிப்படுத்துகின்றனர். மிகச்சுருங்கிய கூறியது கூறல் அற்ற சூத்திர அமைப்பு மிகவும் இரத்தினச் சுருக்கமாக அமைகின்றது.. இதனடிப்படிடையில் மூல ஊற்றாக விளங்குவது மாஹேஸ்வர சூத்திரம் ஆகும்.

பாணினி

சம்ஸ்கிருத மொழியின் காலத்தால் முற்பட்ட இலக்கண ஆசிரியரே பாணினி ஆவார். இவரது பெயர் பற்றிநோக்குகையின் பாணின என்பவரின் மகன் பாணினி என்றோ பணின் என்பவரது பேரன் பாணினி என்றோ, பணி என்பவரது மகள் பாணினி என்றோ இவரது பெயருக்கான பொருளை விபரிக்கலாம். இப்பாணினி தனக்குரிய இயற் பெயரை எங்கும் சுட்டவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. இவரது பெயர் 'தாக்ஷீபுத்ர' என்று அழைக்கப்பதனால் தாக்ஷீ என்பவனின் மகன் என்பதும், ஸாலாதுரீய என்பதன் மூலம் 'ஸலாதுர' எனும் இடத்தை பிறப்பிடமாகக் கொண்டவன் என்றும் பெயர் கொள்ள முடிகின்றது. இந்நிலையில் வடமேற்குப் பகுதியில் தற்போது பாகிஸ்தானிலுள்ள லாதுலாம் எனும் இடமே இவரது பிறப்பிடமாக இன்கலாம் என்று கருப்படுகின்றது. கி.மு 7 – 3 வரையான காலப்பகுதி இவருடையதாக எண்ணப்படினும் கி.மு 4ம் நூற்றாண்டு இவரது காலமாக கருதப்படுகின்றது. இப்பாணினி ஆச்சிய சம்ஸ்கிருத இலக்கண நூலே பாணினீயம் ஆகும்.

செயற்பாடு – 01

சிறுகுறிப்பு எழுதுக.

பாணினி.

பாணினீயம்

பாணினி என்பவரது ஆக்க நூல் பாணினீயம் ஆகும். இந்நூல் சம்ஸ்கிருதமொழியின் இலக்கணநூல் ஆகும். இந்நூல் எட்டு அத்தியாயங்களைக் கொண்டதன் காரணமாக ‘அஷ்டாத்யாயீ’ என்றும் அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. மொத்த 3993 சூத்திரங்கள் சுமார் 4000 சூத்திரங்கள் இந்நூலின் மொத்தமான உள்ளடக்கமாகும். பாணினியின் சூத்திரங்கள் மிகவும் இரத்தினச்சுருக்கமானவை. அவற்றைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாகும். பாணினி சூத்தித்தைப்புரிந்து கொள்வதற்கு பல்வேறு நூல்கள் துணை செய்கின்றன. அவையாவன,

1. சிவசூத்திரம்
2. தாதுபாடம்
3. கணபாடம்
4. உணாதிசூத்திரம்
5. பிட் சூத்திரம்
6. லிங்கானு சாசனம்
7. சிக்ஷா

என்பனவாகும். இந்நூல்களின் ஆசிரியர் பற்றிய ஐயம் உண்டு எனினும், இந்நூல்கள் பாணினியின் இலக்கணத்தைப்புரிந்து கொள்ள மிகவும் அவசியமானவை ஆகும்.

பாணினி தனது இலக்கண நூலிற்கு பல்வேறு விதிகளை கலைச்சாதனங்களாக கையாண்டுள்ளார். அதனடிப்படையில் பின்வருமாறு நோக்கலாம்.

1. பிரத்யாஹாரங்கள்
2. அனுபந்தம்
3. கணங்கள்
4. கலைச்சொற்கள்
5. அனுவிருத்தி

என்பனவாகும். அதேபோல் பல்வேறுபட்ட வழிகளையும் கையாண்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. அவையாவன,

1. சம்க்ஞாவிதி
2. பரிபாஷாவிதி
3. விதி
4. நியமவிதி

5. பிரிதிஷேத/ நிஷேத விதி
6. விபாஷா விதி
7. அதிகார விதி
8. அதிதேஸ

என்றும் விதி அமைவாகும். இவை மிகுந்த நுட்பமானதும் விரிந்து செல்லும் தன்மையதுமாகும்.

மேலதிக வாசிப்பு

1. மீனாட்சி., (1998), **பாணினியின் அஷ்டாத்யாயீ** (தமிழ் மொழிபெயர்ப்புடன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பாகம், 1, 2, 3. பாகம் 1, முன்னுரை பக் 1 -22.
2. அகத்தியலிங்கம்,ச., (2000), **இந்திய மொழிகள், இந்தோ -ஆரியமொழிகள்,** மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம். பக். 162 – 172.

செயற்பாடு - 2

பாணினீயத்தின் அமைப்புமுறை, உரைவளம், சிறப்பு என்பவை பற்றி விபரிக்கும்.

ஆரம்ப இலக்கண முறை

சமஸ்கிருத இலக்கண வரலாற்றில் பழைமையானதும் செம்மையானதுமானதோர் பாரம்பரியம் காணப்படுகின்றது. அம்மரபில் வேதங்களின் சொற்பொருள்விளக்க நூலாகிய நிருத்தம் குறிப்பிடத்தக்கது. இது யாஸ்கரால் ஆக்கப்பெற்றது. இவர் கி.மு 5ம் நூற்றாண்டைச்சாந்தவராவார். இவரது நூலில் இவரது காலத்திற்கு முன்னதாக வாழ்ந்த இருபது இலக்கணகர்த்தாக்களை தனது நூலில் சுட்டுகின்றார். அவர்களுள் சாகடாயனர், கார்க்யர், சாகல்யர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்கள்.

வேத இலக்கியங்களின் பிராமணங்களிலேயே இலக்கணக்கலைச் சொற்கள் காணப்படுகின்றன. அவற்றுள் எழுத்து (வர்ணம், ஆண்பால் (விருஷன்), எண் (வசனம்), வேற்றுமை (விபக்தித போன்றவை குறிப்பிடத்தக்கன. இதேபோன்று ஆரண்யகங்களிலும், உபநிடதங்களிலும் பல இலக்கணக் குறியீடுகள் உள்ளமை நோக்குதற்குரியது.

சமஸ்கிருத இலக்கணக்கோட்பாடுப்பள்ளிகள் (School of Grammar இருந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பள்ளியும் சிறந்த இலக்கண அறிஞர்களால் உருவாக்கப்பட்டு பல்வேறு கோணங்களில் இலக்கண ஆய்வுகளை நடாத்தியுள்ளன. இவற்றுள்

இரண்டு முக்கியத்துவமானவையாகும். ஒன்று பாணினி மற்றயது ஐந்திரக் கோட்பாட்டு பள்ளி ஆகும்.

மேலதிக வாசிப்பு

1. அகத்திய லிங்கம்,ச., (2000), **இந்தியமொழிகள்,** இந்தோஆரியமொழிகள், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் பக். 162 – 172.

மாஹேஸ்வர சூத்திரம்

பாணினியின் சம்ஸ்கிருத இலக்கண நூலுக்கு அடித்தளமாக அமைவது இம் மாஹேஸ்வர சூத்திர ஆகும். இதில் பதினான்கு சூத்திரங்கள் உண்டு. இச்சூத்திரம் சிவனது வடிவங்களுள் ஒன்றாகிய நடராஜ வடிவத்தின் உடுக்கொலியிலிருந்து தோன்றியதன் காரணமாக இது மாஹேஸ்வர சூத்திரம் என அழைக்கப்படுகின்றது அதன்படி நோக்குகையில்,

நடராஜர் நடனமாடிக்கொண்டிருக்கும் வேளை இடையே தனது உருக்கையினை பதினான்கு தடவைகள் ஒலித்தார் அதனால் சனகர் முதலான முனிவர்கள் தமது விரும்பத்தை அடைந்தவர்களாக அவ்வொலிகளினை உணர்ந்து சிவசூத்திரத்தின் சிறப்பை விமர்சனம் செய்ய ஆரம்பித்தனர்'

எனக்கூறுகின்றது. இதனடிப்படையில் நோக்குகையில் இப்பதினான்கு சூத்திரங்களும் மாஹேஸ்வரசூத்திரம், சிவசூத்திரம், பிரத்யாஹார சூத்திரம் என மூன்று பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இப்பதினான்கு சூத்திரங்களும் தன்னுள்ளடக்கியதர்க 41 பிரத்யாஹார சூத்திரங்களாக் கொண்டு விளங்குகின்றது. இச்சூத்திரமே சம்ஸ்கிருத மொழியின் எழுதினர்கள் பற்றிய முழுமையான விடயங்களைத் டுதளிவுபடுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக வாசிப்பு

பாணினியின் அஷ்டாத்யாயீ (1998), தமிழாக்கம், கு.மீனாட்சி, உலகத்தமிபுராய்ச்சி நிறுவனம், சென்னை. பக். 1 - 24.

செயற்பாடு - 3

சம்ஸ்கிருத இலக்கணமரபில் பாணினீயத்தின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக.

சாராம்சம்

சம்ஸ்கிருத இலக்கணத்தின் தந்தை பாணினி ஆவார். இவர் கி.மு 4ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவரது காலத்திற்கு முன்னரும் பல்வேறு இலக்கண கர்த்தர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் அம்மரபில் வேத இலக்கணங்களான யாஙடகரது திருக்கத்தினும் இலக்கண வல்லுனர்கள் சுட்டப்படுகின்றனர். பிராமணங்களிலும், ஆரண்ணியகம், உபநிடதம் ஆகியவனவற்றிலும் இலக்கணம் கலைச் சொற்கள் காணப்படுகின்றன. பாணினிஈ அஷ்டாத்யாயீயம் நுட்பமான அமைவில் அமைக்கப்பட்டுள்ளது. அந்நூல் 20ம் நூற்றாண்டுவரையாக தொடர்ச்சியாக விளங்கும் உரையும் செய்யப்பட்டு வருகின்றது. இம்மரபில் மாஹேஸ்வர சூத்திரம் இதனது பழைமையான தெய்வீகத்தன்னுடைய ஊட்டுவதாக அமைந்து விளங்குகின்றது. இவ்வாறாக சம்ஸ்கிருத இலக்கண இயல்பு முறைமை காணப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

1. மீனாட்சி., (1998), **பாணினியின் அஷ்டாத்யாயீ** (தமிழ் மொழிபெயர்ப்புடன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பாகம், 1, 2, 3. பாகம் 1, முன்னுரை பக் 1 -22.
2. அகத்தியலிங்கம்,ச., (2000), **இந்திய மொழிகள், இந்தோ -ஆரியமொழிகள்,** மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம். பக். 162 – 172.

அமர்வு 03

சம்ஸ்கிருத எழுத்துத்துகள் - இலக்கணப்பகுப்பாய்வு

அறிமுகம்
உயர்எழுத்துக்கள்
மெய்யெழுத்துக்கள்
கூட்டெழுத்துக்கள்
உயிர் எழுத்துக்களின் பகுப்பு
மெய் எழுத்துக்களின் பகுப்பு
உயிர், மெய்யெழுத்துக்களின் தோற்றம்
சாராம்சம்

அறிமுகம்

சம்ஸ்கிருத மொழியின் எழுத்துக்கள் அக்ஷரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை மாத்ருதகா அக்ஷரங்கள் என்றும் அழைக்கப்படும் மரபு காணப்படுகின்றது. உயிர் எழுத்துக்கள் பதினொறும்(16), மெய்யெழுத்துக்கள் முப்பத்தைந்தும் (35) என ஐம்பத்தொரு எழுத்துக்கள் கொள்ளப்படுகின்றன. அவற்றுள் உயிர் எழுத்துக்களன் அனுஸ்வாரம், விசர்கம் என்பனவும், மெய்யெழுத்தில் ள, க்ஷ எனும் இரு எழுதிக்களும் ஒன்று சேர்ந்து எண்ணப்படுகின்றன. அவை நீங்கலாக உயிர் எழுத்துக்களில் பதினான்கும் (14), மெய்யெழுத்துக்களில் முப்பத்து மூன்றுமாக (33), நாற்பத்தேழு எழுத்துக்கள் கணக்கிற் கொள்ளப்படுகின்றன. இவ்வெழுத்துக்களையே பாணிணீயின் மாஹேஸ்வர சூத்திரம் விபரிக்கின்றமை. கவனத்திற் கொள்ளத்தக்கன. சம்ஸ்கிருத எழுத்துக்கள் அனைத்தும் ஒலி வடிவங்கள் ஆகும். இவை ஒவ்வொன்றும் எவ்வெவ்விடங்களில் தோன்றுகின்றன. என்பதனை இலக்கண உரையாசிரியர்கள் தெளிவுபடுத்துகின்றனர். அதன் வழி எழுத்துக்களின் பாகுபாடு கவனத்திற் கொள்ளத்தக்கவாக அமைகின்றன.

உயிர் எழுத்துக்கள்



நன்றி
K.L.V.Skastri InJntcnt Reader

மெய்யெழுத்துக்கள்

॥ व्यञ्जनानि अथवा हलः ॥

CONSONANTS

क	ख	ग	घ	ङ
च	छ	ज	झ	ञ
ट	ठ	ड	ढ	ण
त	थ	द	ध	न
प	फ	ब	भ	म
य	र	ल	व	
श	ष	स	ह	
ळ	क्ष	ज्ञ		

१	२	३	४	५	६	७	८	९	१०
1	2	3	4	5	6	7	8	9	10

நன்றி
K.L.V.Skastri InJntcnt Reader

குறிப்பு:

இங்குகாட்டப்பட்ட உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் தேவநாகரி வரிவடிவத்தில் அமைந்துள்ளன. அவ்வரிவடிவ எழுத்துக்களை எவ்விதம் எழுதுவது என்பதற்குரிய மாதிரி வடிவத்தினை இத்துடன் இணைக்கின்றோம். இவ்வரிவடித்தில் எழுத்துக்களை எவ்வாறு எழுதுவது என்பது வரைபு மூலமாக காட்டப்பட்டுள்ளது.

உயிர் எழுத்துக்களும் இலக்கங்களும்



மெய்யெழுத்துக்கள்

क	ख	ग	घ
ङ	च	छ	ज
झ	ञ	ट	ठ
ड	ढ	ण	त
थ	द	ध	न
प	फ	ब	भ
म	य	र	ल
व	श	ष	स
ह	क्ष	त्र	ज्ञ

நன்றி

www.skastri InJntcnt Reader

உயிர்மெய்கள்

क	ख	ग	घ	ङ	च	छ	ज	झ	ञ
का	खा	गा	घा	ङा	चा	छा	जा	झा	ञा
कि	खि	गि	घि	ङि	चि	छि	जि	झि	ञि
की	खी	गी	घी	ङी	ची	छी	जी	झी	ञी
कु	खु	गु	घु	ङु	चु	छु	जु	झु	ञु
कू	खू	गू	घू	ङू	चू	छू	जू	झू	ञू
कृ	खृ	गृ	घृ	ङृ	चृ	छृ	जृ	झृ	ञृ
कॄ	खॄ	गॄ	घॄ	ङॄ	चॄ	छॄ	जॄ	झॄ	ञॄ
कॢ	खॢ	गॢ	घॢ	ङॢ	चॢ	छॢ	जॢ	झॢ	ञॢ
के	खे	गे	घे	ङे	चे	छे	जे	झे	ञे
कै	खै	गै	घै	ङै	चै	छै	जै	झै	ञै
को	खो	गो	घो	ङो	चो	छो	जो	झो	ञो
कौ	खौ	गौ	घौ	ङौ	चौ	छौ	जौ	झौ	ञौ
कं	खं	गं	घं	ङं	चं	छं	जं	झं	ञं
कः	खः	गः	घः	ङः	चः	छः	जः	झः	ञः

ट	ठ	ड	ढ	ण	त	थ	द	ध	न	प	फ
टा	ठा	डा	ढा	णा	ता	था	दा	धा	ना	पा	फा
टि	ठि	डि	ढि	णि	ति	थि	दि	धि	नि	पि	फि
टी	ठी	डी	ढी	णी	ती	थी	दी	धी	नी	पी	फी
टु	ठु	डु	ढु	णु	तु	थु	दु	धु	नु	पु	फु
टू	ठू	डू	ढू	णू	तू	थू	दू	धू	नू	पू	फू
टृ	ठृ	डृ	ढृ	णृ	तृ	थृ	दृ	धृ	नृ	पृ	फृ
टॄ	ठॄ	डॄ	ढॄ	णॄ	तॄ	थॄ	दॄ	धॄ	नॄ	पॄ	फॄ
टॢ	ठॢ	डॢ	ढॢ	णॢ	तॢ	थॢ	दॢ	धॢ	नॢ	पॢ	फॢ
टे	ठे	डे	ढे	णे	ते	थे	दे	धे	ने	पे	फे
टै	ठै	डै	ढै	णै	तै	थै	दै	धै	नै	पै	फै
टो	ठो	डो	ढो	णो	तो	थो	दो	धो	नो	पो	फो
टौ	ठौ	डौ	ढौ	णौ	तौ	थौ	दौ	धौ	नौ	पौ	फौ
टं	ठं	डं	ढं	णं	तं	थं	दं	धं	नं	पं	फं
टः	ठः	डः	ढः	णः	तः	थः	दः	धः	नः	पः	फः

ब	भ	म	य	र	ल	व	श	ष	स	ह
बा	भा	मा	या	रा	ला	वा	शा	षा	सा	हा
बि	भि	मि	यि	रि	लि	वि	शि	षि	सि	हि
बी	भी	मी	यी	री	ली	वी	शी	षी	सी	ही
बु	भु	मु	यु	रु	लु	वु	शु	षु	सु	हु
बू	भू	मू	यू	रू	लू	वू	शू	षू	सू	हू
बृ	भृ	मृ	यृ			वृ	शृ	षृ	सृ	हृ
बॄ	भॄ	मॄ	यॄ			वॄ	शॄ	षॄ	सॄ	हॄ
बॢ	भॢ	मॢ	यॢ			वॢ	शॢ	षॢ	सॢ	हॢ
बे	भे	मे	ये	रे	ले	वे	शे	षे	से	हे
बो	भो	मो	यो	रो	लो	वो	शो	षो	सो	हो
बौ	भौ	मौ	यौ	रौ	लौ	वौ	शौ	षौ	सौ	हौ
बं	भं	मं	यं	रं	लं	वं	शं	षं	सं	हं
बः	भः	मः	यः	रः	लः	वः	शः	षः	सः	हः

நன்றி

www.skastri InJntcnt Reader

செயற்பாடு – 01

சம்ஸ்கிருத மொழியின் உயிர்மெய்யெழுத்துக்கள்களினை அட்டவணைப்படுத்தி பூர்த்தி செய்க.

செயற்பாடு – 02

சம்ஸ்கிருத வரிவடிவத்தில் பயன்படுத்தப்படுவதற்கு சமமாக தமிழ் மொழியில் பயன்படுத்தும் எழுத்துக்களைத்தருக.

கூட்டெழுத்துக்கள்

संयुक्ताक्षराणि = Conjunct Consonants.

क् + क = क्क	स् + स = स्स	ह् + व = ह्व
ग् + ग = ग्ग	क् + य = क्य	ज् + ञ = ज्ञ
ड् + ड = ड्ड	त् + न = त्न	ह् + र = ह्र
च् + च = च्च	द् + भ = द्भ	क् + त = क्त
ज् + ज = ज्ज	ह् + य = ह्य	प् + र = प्र
ण् + ण = ण्ण	ग् + म = ग्म	द् + व = द्व
त् + त = त्त	ल् + य = ल्य	ष् + ण = ष्ण
द् + द = द्द	प् + न = प्न	द् + म = द्म
द् + ध = द्ध	स् + क = स्क	त् + र = त्र
न् + न = न्न	क् + स = क्स	श् + न = श्न
प् + त = प्त	ध् + य = ध्य	र् + य = र्य
प् + प = प्प	र् + क = र्क	त् + म = त्म
ब् + ब = ब्ब	क् + र = क्र	ग् + य = ग्य
म् + म = म्म	ल् + प = ल्प	स् + न = स्न
य् + य = य्य	क् + श = क्श	ह् + म = ह्म
ल् + ल = ल्ल	क् + ष = क्ष	च् + छ = च्छ
श् + श = श्श	ह् + न = ह्न	म् + य = म्य
ष् + प = ष्प	ह् + ण = ह्ण	व् + य = व्य

संयुक्ताक्षराणि

र्+ध्+व=र्ध्व

श्+च्+य=श्च्य

ष्+ट्+य=ष्ट्य

ड्+ध्+य=ड्ध्य

द्+र्+य=द्र्य

द्+भ्+र्=द्भ्र

त्+र्+य=त्र्य

ण्+ट्+य=ण्ट्य

ह्+म्+य=ह्म्य

क्+ष्+म=क्ष्म

ष्+प्+र्=ष्प्र

क्+स्+य=क्स्य

न्+त्+र=न्त्र

क्+ष्+ण=क्ष्ण

स्+त्+य=स्त्य

त्+त्+र=त्त्र

त्+प्+र=त्प्र

स+त+र=स्त्र

क्+ष्+व=क्ष्व

च्+छ्+व=च्छ्व

त्+स्+य=त्स्य

ग्+भ्+य=ग्भ्य

द्+भ्+य=द्भ्य

र्+भ्+य=र्भ्य

द्+ध्+व=द्ध्व

द्+ब्+र=द्ब्र

र्+ण्+य=र्ण्य

ष्+ट्+व=ष्ट्व

न्+त्+य=न्त्य

न्+द्+य=न्द्य

श्+व्+य=श्व्य

ङ्+ग्+ल=ङ्ग्ल

क्+ष्+य=क्ष्य

ध्+र्+य=ध्र्य

र्+ग्+य=र्ग्य

द्+ध्+य=द्ध्य

நன்றி

K.L.V..skastri InJntcnt Reader

Classification of Vowels.

17. Vowels are divided into—

A. 1. Simple vowels: अ a, आ ā; इ i, ई ī; उ u, ऊ ū; ऋ ṛ, ॠ ṝ; ऌ ḷ.

2. Guṇa vowels: अ a; ए e; ओ o; अर् ar; अल् al.

3. Vṛddhi vowels: आ ā; ऐ ai; औ au; आर् ār[1].

[1] The Vṛddhi form of ऌ ḷ (which would be आल् āl) does not occur.

நன்றி

Asanskrit Grammar for Student

மெய

THE DEVANĀGARI LETTERS

Vowels.

Initial	Medial	Equivalent
अ, अ	—	a
आ, आ	ा	ā
इ	ि	i
ई	ी	ī
उ	ु	u
ऊ	ू	ū
ऋ	ृ	ṛ (or ṛi)
ॠ	ॄ	ṝ (or ṛī)
ऌ	ॢ	ḷ (or ḷi)
ए	े	e
ऐ	ै	ai
ओ	ो	o
औ	ौ	au

Consonants.

	Equivalent			Equivalent	
क	k	Gutturals	प	p	Labials
ख	k-h		फ	p-h	
ग	g		ब	b	
घ	g-h		भ	b-h	
ङ	ṅ		म	m	
च	c	Palatals	य	y	Semivowels
छ	c-h		र	r	
ज	j		ल	l	
झ, झ	or झ j-h		व	v	
ञ	ñ				
ट	ṭ	Cerebrals	श	ś (or ç)	Spirants
ठ	ṭ-h		ष	ṣ	
ड	ḍ		स	s	
ढ	ḍ-h		ह	h	
ण	ṇ				
त	t	Dentals	ः	ḥ (Visarga)	
थ	t-h		ं	ṃ or ṁ (Anusvāra)	
द	d				
ध	d-h				
न	n				

நன்றி

Asanskrit Grammar for Student

செயற்பாடு : 02

சம்ஸ்கிருத மொழியின் எழுத்துக்களின் தோற்றம் பற்றிய எண்ணக்கருக்களை விபரிக்குக.

செயற்பாடு : 03

சம்ஸ்கிருத இலக்கண மரபில் உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றன என்பதனை விபரிக்குக.

6. The following table contains a complete classification (known to Pāṇini) of all the sounds of the Devanāgarī alphabet according to the organs of speech employed in their articulation.

	Hard (tenues).	Hard aspirates.	Soft (mediae).	Soft aspirates.	(Soft) nasals.	(Soft) semi-vowels.	Hard spirants.	Soft Vowels Short, Long.	Soft Diphthongs.
Gutturals	क k	ख k-h	ग g	घ g-h	ङ ṅ	ह h[3]	: ḥ[4]	अ a आ ā	ए e ऐ ai
Palatals[1]	च c	छ c-h	ज j	झ j-h	ञ ñ	य y	श ś	इ i ई ī	
Cerebrals[2]	ट ṭ	ठ ṭ-h	ड ḍ	ढ ḍ-h	ण ṇ	र r	ष ṣ	ऋ ṛ ॠ ṝ	
Dentals	त t	थ t-h	द d	ध d-h	न n	ल l	स s	ऌ ḷ	
Labials	प p	फ p-h	ब b	भ b-h	म m	व v	: ḥ[5]	उ u ऊ ū	ओ o औ au

कू kū, कृ kṛ, कॄ kṝ, कॢ kḷ, के ke, कै kai, को ko, कौ kau. In com-

நன்றி

Asanskrit Grammar for Student

* आभ्यन्तरबाह्यप्रयत्नज्ञानार्थकं कोष्ठकम्—

आभ्यन्तर-प्रयत्नाः	स्पृष्टाः			ईषत्स्पृष्टाः	ईषद्विवृताः		विवृताः	संवृताः
संज्ञाः	स्पर्शाः			अन्तःस्थाः	ऊष्माणः		स्वराः	
वर्णाः	क ख च छ ट ठ त थ प फ	ग ङ ज ञ ड ण द न ब म	घ झ ढ ध भ	य व र ल	श ष स	ह	अ इ उ ऋ ऌ ए ओ ऐ औ	ह्रस्वोऽकारः प्रयोगे
बाह्यप्रयत्नाः	अ.प्रा.म.प्रा. विवाराः श्वासाः अघोषाः	अल्पप्राणाः संवाराः नादाः घोषाः	म. प्रा. संवाराः नादाः घोषाः	अ.प्रा. संवाराः नादाः घोषाः	म. प्रा. विवाराः श्वासाः अघोषाः	म. सं. ना. घो.	उदात्तानुदात्तस्वरिताः	

நன்றி

Asanskrit Grammar for Student

तुल्यास्य[1]प्रयत्नं सवर्णम् १ । १ । ९ ॥

ताल्वादिस्थानमाभ्यन्तरप्रयत्नश्चेत्येतद्द्वयं यस्य येन तुल्यं तन्मिथः सवर्णसंज्ञं स्यात् । (ऋऌवर्णयोर्मिथः सावर्ण्यं वाच्यम्) । अकुहविसर्जनीयानां कण्ठः । इचुयशानां तालु । ऋटुरषाणां मूर्धा । ऌतुलसानां दन्ताः । उपूपध्मानीयानामोष्ठौ । ञमङणनानां नासिका च[2] । एदैतोः कण्ठतालु । ओदौतोः कण्ठोष्ठम् । वकारस्य दन्तोष्ठम् । जिह्वामूलीयस्य जिह्वामूलम् । नासिकाऽनुस्वारस्य* । यत्नो द्विधा—आभ्यन्तरो बाह्यश्च । आद्यः पञ्चधा—स्पृष्टेषत्स्पृष्टेषद्विवृतविवृतसंवृतभेदात् । तत्र स्पृष्टं प्रयतनं स्पर्शानाम् । ईषत्स्पृष्टमन्तःस्थानाम् । ईषद्विवृतमूष्मणाम् । विवृतं स्वराणाम् । ह्रस्वस्या-

* वर्णोद्भवस्थानकोष्ठकम्—

अ	इ	ऋ	ऌ	उ	ञ	ए				
क	च	ट	त	प	म	ऐ	ओ	व	≍क	
ख	छ	ठ	थ	फ	ङ		औ		≍ख	
ग	ज	ड	द	ब	ण					वर्णाः
घ	झ	ढ	ध	भ	न					
ङ	ञ	ण	न	म	ं					
ह	य	र	ल	≍प						
:	श	ष	स	≍फ						
कण्ठः	तालु	मूर्धा	दन्ताः	ओष्ठौ	नासिका	कं.ता.	कं.ओ.	दं.ओ.	जि.मू.	स्थानानि

நன்றி

Lugusiddanthe Kaumathi

செயற்பாடு: 04

சம்ஸ்கிருத மொழியின் இலக்கண மரபில் ஒலிவடிவமான எழுத்துக்கள் எவ்வெவ்விடங்களிலிருந்து தோற்றம் பெறுகின்றன் என்பதனை விளக்குக.

சாராம்சம்

சம்ஸ்கிருத எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் எனப் பாகுப்படுத்தப்பட்டாலும் அவை உட்படுதியில் உயிர் எழுத்துக்கள் குறில், நெடில் எனவும், தனியுயிர் கூட்டுயிர் எனவும் பாகுபடுத்தப்படுகின்றன. மெய்யெழுத்துக்கள் வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்கள் என்றும், தோற்றத்தினடிப்படையில் கண்டஜம், தாலும், மூர்த்தஜம் என்றவாறாகவும் உரையுயிர்கள், ஊஷ்மாக்கள் எனவும் பாகுபடுத்தப்படுகின்றன. ஒலிவடிவின் பதிவாக விளங்கும் எழுத்துக்கள் மனித உடலின் ஒலிவடிவத்தோற்றம் எவ்வாறு அமைகின்றது என்பதனை இலக்கண ஆசிரியர் பாகுபடுத்திக் கூறுகின்றனர். இவ்வாறான இலக்கணவியற் பாகுபாட்டினை சம்ஸ்கிருத எழுத்துக்களில் இனங்கண்டு கொள்வது அவசியமானதாகும்.

உசாத்துணை நூல்கள்

1. K.L.V.shastrii, (1968), Infant Reader, Culcutta.
2. Lagusiddantha Kaunu, Bombay.
3. கைலாசநாதக்குருக்கள், கா., (2014), சம்ஸ்கிருத இலகுபோதம் பாகம் 1, 2. கொழும்பு.
4. Macdonel, A.A., (2008) A Sanskrit Grammar for students D.K.Pritworld (P)td, Delhi.

அமர்வு 04
சம்ஸ்கிருத வினைவடிவங்கள்
நிகழ்கால வினை வடிவங்கள்

அறிமுகம்
வினைவடிவங்கள்
பரஸ்மைபதம், ஆத்மனேபதம்
கணங்களின் பாகுபாடு
முதற் தொகுதிக் கணங்கள்
நிகழ்கால வினைமுற்று
இறந்தகால வினைமுற்று
ஏவல் வினைமுற்று
வியங்கோள் வினைமுற்று
சாராம்சம்

அறிமுகம்

சம்ஸ்கிருத இலக்கண மரபில் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றுள் வினைச் சொல் வடிவங்கள் பற்றி நோக்குவதே இவ்வமர்வின் நோக்கமாகும். வினைச் சொற்கள் 'தாது' என அழைக்கப்படுகின்றன. பாணினி ஆசிரியர் தாதுக்களை ஒன்றுதொகுத்துள்ளார். அது 'தாதுபாடம்' என்றழைக்கப்படுகின்றது. இலக்கண மரபில் தாதுக்கள் பல்வேறு பாகுபாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் அவை பதங்கள் என அழைக்கப்பட்டு அவை முதன்னிலையில் இரண்டாக பாகுபடுத்தப்படுகின்றன. அவையாவன 1. பரஸ்மைபதம், 2. ஆத்மனேபதம் என்பதாகும். அவ்விரண்டு நிலைகளும் விளங்கும் அதேவேளை வினைச்சொற்கள் 10 கணங்களாக பிரிக்கப்படுகின்றன. அவை இலக்கண வரன் முறையில் கட்டமைக்கப்படுகின்றன. பத்துக் கணங்களும் அவற்றின் இயல்பு நிலைக்கேற்ப மேலும் இருதொகுதிகளாக வகுக்கப்படுகின்றன. அவற்றின்வழி 1ம், 4ம், 6ம், 10ம் கணங்கள் ஒரு தொகுதியாகவும், 2ம், 3ம், 5ம், 7ம், 8ம், 9ம் கணங்கள் இன்னொரு தொகுதியாகவும் பாகுபடுத்தப்படுகின்றன. அந்நிலையில் முதல் வகையாக நோக்கப்பட்ட வினைத்தொகுதியே இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றன. இம்மரபுகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கணவரன்முறையில் ஐந்து காலங்களாக கொள்ளப்படுகின்றன. அவை இலக்கண மரபில் லட், லேட், லுட், லோட், விதிலிங் என பாகுபடுத்தப்பட்டிருப்பது சுட்டிக்காட்டத்தக்கது. அத்தகைய கட்டமைவில் சம்ஸ்கிருத வினை வடிவங்களை நோக்குவதே இவ்வமர்வாகும்.

வினை வடிவங்கள்

சம்ஸ்கிருத இலக்கணவடிவில் பின்வரும் காலங்கள் சுட்டப்படுகின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு.

1. நிகழ்காலம் (லட்) (Present Tense)
2. ஏவல்வினை (லோட்) (Imperctive Mood)
3. வியங்கோள்வினை (விதிலிங்) (Potential)
4. இறந்தகாலம் (அநத்யதன பூதகால) இறந்தகாலம் (லங்) (Imperfect– Pasttence)
5. எதிர்காலம் / முதலாம் வருங்காலம் (லுட்) First future / Periphrastic future)

எனும் ஐந்து நிலைகள் தனித்துவம் பெற்றனவாக விளங்குகின்றன. இந்நிலையில் இறந்தகாலம் ஐந்து வகையாகவும், எதிர்காலம் மூன்றுவகையாகவும் இதைவிட ஆசீர்வாத வினை, செயப்பாட்டுவினை, பிறவினை எனும் வடிவங்கள் என விரிந்து செல்லும் தன்மையதாகின்றது.

மேலதிக வாசிப்பு:

Madnonell,A,A.,(2008), Asanskrit Gramar for Student,D.K.Printworld (P0 Ltd, Delhi.

பரஸ்மை பதம், ஆத்மனேதம்

சம்ஸ்கிருத மொழியில் வினைச் சொற்கள் இரண்டாக பாகுபடுத்தப்படுகின்றன. அவை பரஸ்மைபதம், ஆத்மனே பதம் என்பனவாகும். பரஸ்மைபதம் என்பது பிறர்கூற்றாக பயன்படுத்தப்படும் வினைச்சொற்கள் என்னும் பொருள் தருகின்றன. இலக்கண காரின் இத்தகைய வரன்முறை உற்று நோக்கத்தக்கதாகும். எனினும் இத்தகைய கட்டமைப்பினை பெரும்பாலும் பின்பற்றவல்லை என்றே கூறலாம் எனினும் பரஸ்பமைபதம் ஆத்மனோபதம் எனும் பாகுபாடு காணப்படுகின்றது.

மேலதிகவாசிப்பு

Macdonell, A.A., (2008),**A Sanskri Grammer for Student** D.K Printworld(P) Ltd.

கணங்களின் பாகுபாடு

சம்ஸ்கிருத மொழி இலக்கணத்தில் தாதுக்கள் பத்து கணங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை இரு தொகுதிகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அதன்படி முதலாம் தொகுதி நிலையில் 1ம், 4ம், 6ம், 10ம் கணங்களும், இரண்டாம் தொகுதிநிலையில் 2ம், 3ம், 5ம், 7ம், 8ம், 9ம் கணங்களுக்கு இடம்பெறுகின்றன. கணங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிகரணத்தையோ அன்றில் இயல்லையோ தமதாக்கிக் கொண்டு விளங்குகின்றன. அதனடிப்படையில் பத்துக்கணங்களையும் பின்வருமாறு நோக்கலாம்.

Names of the conjugations.

1st Conjugation or	भू class	भ्वादिः	अ	முதலாம் கணம்
4th Conjugation or	दिव् class	दिवादिः	य	நாலாம் கணம்
6th Conjugation or	तुद् class	तुदादिः	अ	ஆறாம் கணம்
10th Conjugation or	चुर् class	चुरादिः	अय	பத்தாம் கணம்
2nd Conjugation or	अद् class	अदादिः	-	இரண்டாம் கணம்
3rd Conjugation or	हु class	जुहोत्यादिः	-	மூன்றாம் கணம்
5th Conjugation or	सु class	स्वादिः	नु	ஐந்தாம் கணம்
7th Conjugation or	रुध् class	रुधादिः	न	ஏழாம் கணம்
8th Conjugation or	तन् class	तनादिः	उ	எட்டாம் கணம்
9th Conjugation or	क्री class	क्र्यादिः	ना	ஒன்பதாம் கணம்

நன்றி

சுப்பிரமண்யசாஸ்திரி, கி., **நியாய லகு வியாகரணம்**
யாழ்ப்பாணம்

முதற்றொகுதிக் கணங்கள்

நம்ஸ்கிருதமொழியின் இலக்கணமரபில் முதற்றொகுதி கணங்கள் என 1ம், 4ம், 6ம், 10ம் கணங்களே கொள்ளப்படுகின்றன. அவற்றினை அடித்தளமாகக் கொண்டு பரஸ்மைபதம், ஆத்மனே பதம் எனும் இலக்கணகாரரது பாகுபாட்டிற்கு ஏற்ப விளையடிகள் விதிமுறைப்படியான தனது வடிவங்களை ஏற்கும் தன்மையதாகின்றன. அதனை அடிப்படையாயகக் கொண்டு நோக்குவது பொருத்தமுடையதாகவும், இவற்றின் விரிந்தன்மைகள் பின்னர் விரிவுபடும் தன்மையாதாகவும் விளங்கும்.

குறிப்பு:

இத்தகைய தன்மையை **'சம்ஸ்கிருதஸ்ரீ'** எனும் பாடநூல்தரும் பக்கங்கள் விளக்கத்தை நோக்குவோம்.

விளைச் சொற்கள்

பாணினி ஸம்ஸ்க்ருத மொழியின் முதல் இலக்கண ஆசிரியர். சுமார் 1950 வினைப் பகுதிகளைத் தொகுத்து வகைப்படுத்தி தாதுபாடம் என்ற நூலை எழுதியுள்ளார். அவை மாறுபடும் இயல்பை உற்று நோக்கி 10 கூறுகளாகப் பிரித்தார். கூறுகளை விகரணம் என்பர். ஒவ்வொரு விகரணத்திற்கு ஒரு அடையாளம் (விகரணப்-பிரத்யயம்—Conjugational Sign) உண்டு. 1-4-6-10 வது விகரணங்கள் கற்க எளிதானவை. இவை முறையே अ, य, अ, अय என்ற அடையாளங்களை ஏற்கின்றன. வினைப்பகுதி + அடையாளம் + விகுதிகளின் கூட்டு வினைச் சொல்லாகும். पठ् + अ + ति = पठति। கீழே 1-4-6-10 வது விகரணங்களின் தாதுக்களை 1. சாதாரண தாதுக்கள் (simple roots) 2. விதிமுறைக்குட்பட்டு மாறுதலடையும் தாதுக்கள் (regular

roots). 3. சம்பந்தமில்லாதபடி மாறுதலடையும் தாதுக்கள் (irregular roots) என்று வகைப்படுத்தித் தருகிறோம். சாதாரண தாதுக்களில் எந்த மாறுதல்களும் நிகழ்வதில்லை. 2வது வகையில் தாதுக்களில் ஏற்படும் மாறுதல்களை ஒப்பிட்டு நோக்கின் ஒரு பொதுவிதி அமைக்க முடிகிறது. 3வது வகையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆனால் எந்த பொது விதியும் அமைக்க முடிவதில்லை. எனவே, இரண்டாவது மூன்றாவது வகைகளில், மாறுதல் ஏற்படுவதற்கு முன் உள்ள உருவம், மாறுதல் ஏற்பட்டபின் உள்ள உருவம், இரண்டையும் சேர்த்துக் குறிப்பிட்டு இரட்டைத் தாதுக்கள் என்று குறிப்பிடுவதுண்டு. (2-3 பகுதிகளைப் பார்க்கவும்)

